பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

நல்லூர் கிளை நூலகம்

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 08 வியாழக்கிழமை (20-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 85

# தெரிவுக் குழுவின் அறிக்கை மார்ச் 15ம் திகதிக்கு முன்னர்!

## மங்களா யாழ். வருவது சந்தேகம்

கொழும்பு, பெப்ரவரி 20

**இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அனேகமாக அடுத்த மாதம் (மார்ச்) பதினைந்தாம் திகதிக்கு முன்னர் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று மிகவும் நம்பிக்கையாகத் தெரியவருகிறது.**

பல அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும், பொது நிறுவனங்களும், வெளிநாட்டிலுள்ள தமிழர் அமைப்புக்களும் அனுப்பிவைத்த ஆலோசனைகளை தெரிவுக் குழு இப்போது வெகுகவனமாக ஆராய்ந்து வருகிறது.

எவ்வாறாயினும் தனது அறிக்கையை மார்ச் நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத்திடம் சமர்ப்பித்துவிட வேண்டும் என்ற இலக்கோடு தெரிவுக் குழு தனது பணிகளை ஆற்றி வருவதாக குழுவுடன் நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, தனது குழுவின் அறிக்கையை சமர்ப்பித்து நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெறுவதற்கு முன்னர், திரு. மங்கள முனசிங்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் சாத்தியம் எதுவும் இல்லை என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து உதயனுக்குத் தகவல்கிடைத்தது.

தெரிவுக் குழுவுக்கு கொழும்பிலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழர் அமைப்புக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

செவ்வாய் இரவு காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பொன்னாலைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. சில வீடுகள் சேதம் அடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

## நான்கு உளவாளிகள் நேற்று பொது மக்கள் பார்வைக்கு

தேசத் துரோகச் செயல்களுக்காக விடுதலைப் புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்ட நான்கு உளவாளிகள் நேற்றுக் குடாநாட்டில் பல பகுதிகளிலும் மக்கள் முன் நிறுத்தப்பட்டனர்.

முருகேசு தர்மராஜன் (45 வயது — கணேசபுரம், கிளிநொச்சி), அந்தோனி பிரகாசம் (42 வயது—வட்டக்கச்சி, கிளிநொச்சி), மனுவல் மரிய கென்றாட் [வின்சன்] (41 வயது — திருநகர், கிளிநொச்சி), இராமலிங்கம் மகேஸ்வரன் (மகேந்திரன்), (54 வயது—கம்பர்மலை, வல்வெட்டித்துறை) ஆகியோரே இந்த நால்வரும் ஆவர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மானிப்பாய், குருநகர் ஆகிய நான்கு இடங்களில் இவர்கள் நேற்று மக்கள் முன் நிறுத்தப்பட்டனர். இவர்கள் மக்கள் முன் நிறுத்தப்பட முன்னர் அந்தந்த இடங்களில் கூட்டம் நடத்தப்பட்டு உளவாளிகள் பற்றிய விவரங்களும் விளக்கப்பட்டன.

இன்று வியாழக்கிழமை இந்த நால்வரும் சாவகச்சேரியில் மக்கள் முன் நிறுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

[இ-3]

## பௌத்த மத குருமாரை யாழ். அழைத்துவர முயற்சி

### எனினும் இராணுவம் தடுக்குமாம்

கொழும்பு, பெப். 20

யாழ்ப்பாணத்துக்கு கடந்த ஜனவரி மாதத்தில் விஜயம் செய்திருந்த கத்தோலிக்க மத குருமார் நல்லெண்ணத் தூதுக் குழு இம்மாத இறுதியில் மீண்டும் அங்கு செல்லக் கூடும் என்று அறியவருகிறது.

கத்தோலிக்க மதகுருமார் எப்பாடுபட்டும் தம்முடன் ஆகக் குறைந்தது இரண்டு பௌத்த மதகுருமாரையேனும் அழைத்துச் செல்வதில் இப்போது தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பௌத்த குருமாரை யாழ்ப்பாணம் கூட்டிச்செல்வதை இராணுவத்தினர் விரும்பவில்லை என்றும், பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அவர்களைத் தடுத்து விடுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[அ-உ]

## 47 நோயாளர் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 20

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'குமண' கப்பலில் 47 நோயாளர்கள் கூட்டி வரப்பட்டனர்.

[இ-3]

## தபால் பொதிகள் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், பெப். 20

நேற்றுக்காலை பருத்தித்துறையை வந்தடைந்த குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட 243 தபால் பொதிகள் நேற்று இரவு யாழ் பிரதம தபாலகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

இதேவேளை குமண கப்பலில எடுத்து வரப்பட்ட அனலைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிகளுக்கான தபால் பொதிகள் இன்று கப்பல் மூலம் அங்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

[இ-5]

## இயக்கச்சியில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், பெப். 20

இரு குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை இயக்கச்சிப் பகுதியில் தாக்குதல் நடத்தின.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் கிடைக்கவில்லை.

இதே சமயம் — வவுனியா மதினாநகர்ப் பகுதியிலும் நேற்றுக் காலை தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரு குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய இத்தாக்குதலில் வீடு ஒன்று சேதம் அடைந்தது.

(இ-5)

## 25 சதவீதமானோரே பஞ்சாப்பில் வாக்களிப்பு

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற சட்டசபை மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் 25 சத்வீத வாக்காளர்களே வாக்களித்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

வாக்குகள் எண்ணப்படுவது இன்று [வியாழன்] ஆரம்பமாகிறது. முதலாவது தேர்தல் முடிவு இன்று நண்பகல் அளவில் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாநில சட்டசபைத் தேர்தலில் ஏற்கனவே இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஒருவரும் அகாலிதள் (காபூல்) பிரிவின் வேட்பாளர் ஒருவரும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர் என்பது தெரிந்ததே.

[இ-எ]

## புஷ்ஷுக்கு அதிர்ச்சி

வாஷிங்டன், பெப். 20

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக் கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காக நியூ ஹாம்ப்ஷயர் மாநிலத்தில் நேற்று நடைபெற்ற பூர்வாங்கத் தேர்தலில் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு பலத்த அதிர்ச்சி கிடைத்தது.

திரு. புஷ் அதில் வெற்றியீட்டியிருந்தும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ரொபர்ட் புக்கானன் என்பவருக்கு 41 சத வீத வாக்குகள் கிடைத்ததே அந்த அதிர்ச்சிக்குக் காரணமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

[இ-எ]

## சு. க. எம். பிக்கள் படுக்கை, தலையணையுடன் நாடாளுமன்றம் வருவரா?

கொழும்பு, பெப். 20

கொழும்பில் தங்குவதற்கு இட வசதிகள் அளிக்கப்படாத காரணத்திற்காக சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முப்பது எம். பிக்கள் இன்று வியாழன் முதல் நாடாளுமன்றக் கட்டடத்திலேயே தங்கி இருக்கப் போகின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் சபாநாயகருக்கும் உப சபாநாயகருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

கொழும்பிற்கு வெளியே வசித்து வரும் இந்த எம். பிக்கள் கொழும்பில் தங்குவதற்கு இடவசதி அளிப்பதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக சுதந்திரக்கட்சி எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பி. பி. சிக்குத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் இதுபற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்றும் 24 மணித்தியாலங்களில் தீர்வு காணப்படும் என்றும் சபாநாயகர் தமக்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மண்டைதீவிலிருந்து கலிபர் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 20

நேற்று அதிகாலை மூன்று மணியளவில் மண்டைதீவுப் பகுதியில் இருந்து யாழ். பண்ணைப் பகுதியை நோக்கி இராணுவத்தினர் கலியர் தாக்குதலை மேற்கொண்டனர்.

[இ-5]

## முச்சந்தி முரளி



புஷ், புஸ்வாணமாய்ப் போய் விடுவாரோ......?

# பிரபா தயாரித்த புதிய போருபாயம்; 3 1/2 மாதத்தில் 400 படையினர் பலி

யாழ்ப்பாணம். பெப். 20

ஸ்ரீலங்காப் படையினருக்கு எதிரான யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய போருபாயம் ஒன்றைத் தற்போது கடைப்பிடித்துவருகின்றனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மின்னல் வேகத் தாக்குதல்களை நடத்திப் படையினரைத் திணறடிக்கும் இந்தப் போருபாயத்தை விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனே தயாரித்து நடைமுறை உருவமும் கொடுத்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் இம்மாதம் 15 ஆம் திகதி வரையிலான மூன்றரைமாத காலத்தில் 30க்கும் மேற்பட்ட தாக்குதல்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன என்றும் விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்த 30 தாக்குதல்களிலும் 400 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 209 நவீன ஆயுதங்களும் பல்லாயிரக்கணக்கான ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் விடுதலைப் புலிகள் சார்பில் நூறு போராளிகளே வீரமரணத்தை அடைந்துள்ளனர்.

இன்றைய நெருக்கடியான சூழ்நிலைக்கேற்ப விடுதலைப் புலிகள் தலைவரினால் தயாரிக்கப்பட்ட புதிய போருபாயம் காரணமாகவே ஸ்ரீலங்கா இராணுவத் தலைமைப் பீடம் திட்டமிட்டபடி தனது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் அந்த ஏட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இலவச திருமணசேவை

36 வயது, உத்தராடம் 4. செவ்வாய் 2, படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் ஞாயிறு காலையில் எமது சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். து.விமலா, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். [5048]

## மணமக்கள் தேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணப்பெண்களும் மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோரும், அல்லாதோரும் நிறைய இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19766]

## யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்.

பின்வரும் பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-03-06 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**உடலமைப்பியலில் தற்காலிக உதவி விரிவுரையாளர்**

சம்பள அளவுத்திட்டம்:

தற்காலிக உதவி - விரிவுரையாளர்:-

ரூபா 3,900/- மாதம் ஒன்றுக்கு (நிலையானது)

1. மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும், இதர விவரங்களையும் இப் பல்கலைக்கழக ஸ்தாபனக்கிளையின் உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களிற்கான வேண்டுகோளுடன் 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.
3. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பனவற்றில் உள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

**– பதிவாளர்.**

யாழ்ப்பாணம்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-02-18.

[சி-1526]

உ

# அரியாலையூர் செல்வி க. சரவணமுத்து

மங்கையராய்ப் பிறப்பதற்கே
மாதவம் செய்திட வேண்டுமம்மா.

— பாரதியார்

"நன்றே செய்வோம் அன்றே செய்வோம்" என்பதே அண்மையில் அமரரான செல்வி க. சரவணமுத்து அவர்களின் தாரக மந்திரமாகும். எண்ணியதை எண்ணியவாறே எய்தும் திறனுடைய இவர் என்றும் ஓய்ந்திருந்ததில்லை. அரியாலையூரில் 1913 ஆம் ஆண்டு உயர் குடியில் சரவணமுத்து அன்னம்மா தம்பதியருக்கு மூன்றாவது மகளாகப் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் கற்றார்.

மாணவியாயிருந்த காலத்தில் கல்வியுடன் கலை, விளையாட்டுத்துறைகளிலும் திறமைசாலியாகத் திகழ்ந்தார். லண்டன் மற்றிகுலேசன், மற்றும் பட்ட இடை நிலைப் பரீட்சையிலும் தேறி யாழ். இந்துக் கல்லூரியில் சில காலம் ஆசிரியையாகக் கடமையாற்றினார். பின்னர் தமிழ் நாடு சென்று விஞ்ஞானப் பட்டதாரி ஆனார்.

மட்டக்களப்பு, அளுத்கம போன்ற இடங்களில் ஆசிரியையாகவும், விரிவுரையாளராகவும் சிறிது காலம் கடமையாற்றிய பின் அவரது துடிப்பான போக்குக்குப் பொருந்துவதாகப் பாடசாலைப் பரிசோதகர்ப் பதவிக்குத் தெரிவானார். அக்காலத்தில் அவர் சிறப்பாகக் கடமையாற்றியமையினால் வட மாகாணம் முழுவதும் அறியப்பட்டிருந்தார்.

ஊழல்கள் மலிந்த அக்காலத்தில் செல்வி சரவணமுத்து அவர்கள் சில பாடசாலை நிர்வாகத்துடன் மோத வேண்டியும் ஏற்பட்டது. தாம் ஆரம்பக் கல்வி பெற்ற யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் முகாமையாளராகவும் இவர் சில ஆண்டுகள் கடமையாற்றினார்.

### வட இந்து அதிபரானார்

செல்வி சரவணமுத்து அவர்களின் நெஞ்சுரத்தையும், நேர்மைத் திறத்தையும் அவதானித்த வடமராட்சிக் கல்விமான்கள் அக்காலத்தில் நலிந்த நிலையில் இருந்த வட. இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்குமாறு அன்னாரை வற்புறுத்தினர். புதிய அதிபரின் அயரா ஊக்கத்தினாலும், விசுவாசமான சேவையினாலும் சிறிய பாடசாலை போலிருந்த அக் கல்லூரி பலரும் வியக்கும் வகையில் வளர்ச்சி கண்டது மாணவிகள் அகில இலங்கை ரீதியில் எல்லாத் துறைகளிலும் போட்டியிட்டு வெற்றியீட்டினர். எல்லாத் துறைகளிலும் பல்கலைக்கழகத் தெரிவு பெற்றனர். வடமராட்சிப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு சரவணமுத்து அம்மா ஆற்றிய அரும்பணியை அப்பகுதி மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.

அயற்கிராமத்துக்கு அயராது உழைத்தவர், சொந்தக் கிராமத்துக்கு குறிப்பிடத்தக்கதாக எதுவும் செய்யவில்லையென்று குறை கூறுவாருமுளர். சற்குணம் அம்மா என்று அன்புடன் அறியப்பட்ட இவரது உள்ளமும், உணர்வும் வரையறை அற்றவை. தமது சகோதரர்களின் மக்களிலும் பார்க்க அதிகமாகவே அவர் தம்மை அண்டி வளர்ந்த பிள்ளைகளை நேசித்தார். கல்வி புகட்டினார். வெளிநாடுகளுக்கும் அனுப்பினார். மணவினை செய்து மகிழ்ந்தார். செல்வியான இவர் பல பிள்ளைகளுக்குத் தாயாக விளங்கினார்.

பெரும் பொறுப்பு வகிப்பவர்கள் முரண்பாடுகளையும், இடையூறுகளையும் சந்திப்பது தவிர்க்க முடியாதது. அவ்வாறு உத்தியோக சம்பந்தமாக ஏற்பட்ட வழக்கு ஒன்றில் சரவணமுத்து அம்மா ஈட்டிய வெற்றி அவரது புத்திக் கூர்மையையும் தீர்க்கதரிசனத்தையும் வெளிப்படுத்தியது. அவ்வழக்கு தீர்மானிக்கப்பட்ட வழக்காக (Decided Case) புதிய சட்ட அறிக்கை (N.L.R) புத்தகத்தில் உள்ளது.

### மக்களின் உயிர் காத்தவர்

1987 இல் இந்திய அமைதிப்படை கோயிலில் தஞ்சமடைந்திருந்த பொது மக்களின் மீது தனது துப்பாக்கி வீரத்தைக் காட்ட முயன்ற பயங்கர வேளையில், அவர்களோடு துணிந்து வாதிட்டு மக்களைக் காத்ததைப் பலர் நினைவு கூருவர். அவர்கள் கைது செய்த பல இளைஞரையும். யுவதிகளையும் விடுவித்த பெருமையும் அம்மையாருக்கு உண்டு. ஒரு தடவை கொழும்பில் மரணமடைந்து அடையாளம் காணப்படாத காரணத்தால் கனத்தையில் புதைக்கப்பட்ட ஒருவரின் உடலை மனைவியின் கோரிக்கைக்காக (இரு மாதங்களின் பின்) கொழும்பு சென்று நீதி மன்ற உத்தரவு பெற்று தோண்டி எடுத்துத் தகனஞ் செய்து அஸ்தியையும் கொண்டு வந்தார்.

சரவணமுத்து அம்மையார் சிறந்த விநாயக உபாசகர். அரியாலை ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வீதியில் வதியும் பேறு பெற்ற இவர், வெள்ளிக்கிழமைகளில் இந்து மாமன்ற மாணவரைக் கொண்டு கோயிலில் பஜனை செய்விப்பார். விசேட தினங்களையும் மன்ற சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவார். சமயப் போட்டிகள் வைத்துப் பரிசில்கள் வழங்குவார். இவர் பல காலம் அரியாலை இந்து மா மன்றத்தின் தலைவியாகவிருந்து இறுதிக்காலம் வரை இச்சீரிய பணியைச் சிறப்புறச் செய்தார். மகேஸ்வர பூசை செய்வித்தலில் இவரை மிக்கவர் எவருமில்லை எனலாம்.

பல வருடங்களுக்கு முன்னர் இவர் கூட்டிய அரியாலை மாதர் சங்கம் பல காரணங்களால் வளரவில்லை. எனினும் அவர் முயன்று கட்டிய கட்டடங்கள் இன்றுமுள்ளன. இவரைப் போன்ற வேறு தலைவிகள் இன்றுவரை வழிநடத்த முன்வராததால் அது நோயுற்ற நிலையிலேயே உள்ளது.

### நினைவுச் சின்னம்

தனித் தலைவியாய், முன்னணிப் பெண்மணியாய் விளங்கிய சரவணமுத்து அம்மா தமது வயது முதிர்ந்த பராயத்தில், சென்ற ஆண்டு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு முன்பாக அமைத்த பாலர் கழகக் கட்டடம் அவரது நினைவுச் சின்னம் போன்றது. பல ஆதரவாளர்களதும், தமதும் நிதியினால் எழுப்பப்பட்ட அக் கட்டடத்தின் ஒரே கர்த்தா அவரே எனலாம்.

நிதி விடயங்களில் அம்மையார் அதிக சுய நம்பிக்கை உள்ளவராயிருந்தார். பொது நிதி கையாளப்படுதலில் எந்தப் பிழையும் நேரக்கூடாது என்ற பெரு விருப்பே அதற்குக் காரணம். சென்ற தைத்திங்கள் 21 - 01 - 1992 அன்று கொழும்பில் சிவப்பேறு எய்திய அம்மையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறுகின்றன. அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

**திருமதி அருள் துரைசாமி,**
**அரியாலை இந்து மாமன்றம் சார்பாக.**

விளம்பர இல. (சி-5125)

# வனிக்கா மெடிக்கல்ஸ்

**274/2 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

எமது ஸ்தாபனத்தில் மருந்து விநியோகம் நடைபெறவுள்ளது. தனியார் வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலைகள், மருந்துச் சாலைகள் சம்பந்தப்பட்டோர் எம்மோடு உடன் தொடர்பு கொள்ளவும்,

[5052] – நிர்வாகம்.

# ஆசிரியை தேவை

நவீன முறைப்படி தையல் வேலை, மனையியல் ஆகியன கற்றுக்கொடுப்பதற்கு தேர்ச்சி பெற்ற அனுபவம் மிக்க ஆசிரியை தேவை.

தேர்ச்சி பெற்ற சான்றிதழ்கள், அனுபவங்கள் ஆகிய தகவல்களுடன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி மாசி 28 ஆம் திகதி

வண. G, D. ஆனந்தராஜன்,
குருமனை, பேராலயம்,
தென்னிந்திய திருச்சபை,
வட்டுக்கோட்டை.

[சி/1610]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வி க. சரவணமுத்து

[முன்னாள் ஆசிரியை, யா/ இந்துக் கல்லூரி, முன்னாள் அதிபர், வட/இந்து மகளிர் கல்லூரி, முன்னாள் முகாமையாளர், யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, முன்னாள் வட்டாரக் கல்வியதிகாரி, யாழ்/ கல்வித் திணைக்களம், தலைவி, அரியாலை இந்து மாமன்றம்]

**இகம்: 1913** **பரம்: 21-01-1992**

ஆசானாய், அதிபராய் ஆற்றிய சேவையை
தே சொடு செய்த தெய்வத் தொண்டினை
பாச மிகுந்த புண்ணியப் பணிகளை
நேசர் நினைந்து நெய்யாய் உருகுவர்.

**சகோதரர்: தனபாலசிங்கம்,**
**அரியாலை இந்து மாமன்ற உறுப்பினர்கள்.**

[சி/1527]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தமிழை வளர்க்க...

தமிழ் மொழியின் சொல் வளத்தைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரும், பேராசிரியருமான நந்தி இந்த யோசனையை முன்வைத்திருக்கிறார்.

புதிய சிந்தனைகள் பிறந்து கொண்டிருக்கும் காலம் இது. விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகள் துரிதமாக வளர்ச்சி கண்டு வருகின்றன.

உலகின் ஏனைய மக்களுடன் தமிழர்களும் ஈடு கொடுத்து வாழ்வதற்கு, புதிய சிந்தனைகள், தொழில் நுட்பம், விஞ்ஞானம் ஆகியவற்றை விளங்க வைக்கும் தகுதி தமிழுக்கு வரவேண்டும். அந்தத் தகுதிக்கான அடித்தளமும், ஆதாரமும் தமிழுக்கு இல்லாமல் இல்லை. நிறைய உண்டு.

ஆனால் தமிழின் பரந்த மொழிவளமும், சொல்வளமும் தக்கபடி வழக்கிற்கு, நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை என்பதே இப்போதுள்ள குறைபாடாகும். சங்க கால இலக்கியங்களில், அதன் பின் பிறந்த திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் செழிப்பும் நயமும் மிக்க பொருள் பொதிந்த தமிழ்ச் சொற்கள் உள்ளன. அவை தக்கபடி நடைமுறை வசன அமைப்புத் தமிழிலிருந்து புறத்தே உள்ளன.

தமிழ் வழக்கு கவிநடையிலிருந்து வசனநடைக்கு மாறியபோது, பல அருந்தமிழ்ச் சொற்கள் புறந்தள்ளப்பட்டு விட்டன; ஓரங்கட்டப்பட்டு விட்டன அதனால் அவை இன்று வழக்கொழிந்து போய் விட்டன அதனாலேயே தமிழில் சொற்பஞ்சம் ஏற்பட்டது போன்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது.

இதன் அர்த்தம் என்னவெனில், தமிழ் வளம் நிறைந்த, வளர்ச்சி கண்ட மொழியாக இருந்தபோதிலும் அதனைப் பேணுவதிலும், வளர்ப்பதிலும், நடைமுறை வழக்கில் கையாள்வதிலும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதேயாகும். படித்தவர்கள். கற்றவர்கள், பாண்டித்தியம் பெற்றவர்கள் தமக்குத் தெரிந்தவை சாமானியனுக்குச் சென்றடையக் கூடாது என்று கடைப்பிடித்த தவறான நோக்கும் போக்குமே இதற்குக் காரணங்கள்

இந்தத் தவறைத் திருத்த வேண்டிய காலம் வந்து விட்டது. மொழியும், வளமும். அதன் பயன்பாடும் ஒரு சிலருக்கு உரியனவை என்ற தனி உடைமை நிலை மாற்றப்பட வேண்டும். தமிழ் மக்கள் எல்லோரதும் பொதுவான உடைமையாக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் அவசியம்.

தமிழின் வளமும், செழிப்பும் வெறும் ஏடுகளோடு கிடந்து செல்லரித்துப் போகாமல், ஏட்டுச் சுரைக்காய்களாக இல்லாமல், நாளாந்தம் மக்களால் பயன்படுத்தக் கூடிய நிசமான சுரைக்காய்களாக மாற்றப்பட வேண்டும். இதுவே இன்றைய பணியாகும். நீண்ட காலமாக இந்தப் பணி கைவிடப்பட்டிருந்தாலேயே தமிழில் சொற்பஞ்சம் ஏற்பட்டது போன்ற ஒரு நிலை தோன்றியிருக்கிறது,

இந்தப் பணி அரசாங்க மட்டத்தில். உயர்கல்வி பீடங்களின் மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியது. தமிழ் வளர்ச்சியில் அக்கறை உள்ள அமைப்புகளும் இயக்கங்களும் இவ்வழியில் தம்மாலான உதவியைச் செய்யலாம்.

தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள், அபிமானிகள் ஆகிய சகல தரப்பாரும் இது குறித்து அக்கறை கொள்வார்களாக.

# மக்களை விழிப்படையச் செய்யவே உளவாளிகளை காட்டுகிறோம்

## புலிகள் பிரமுகர் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப். 20

தமிழீழத்தில் ஊடுருவியுள்ள உளவாளிகளுக்கு படிப்பினையாகவும், உளவாளிகள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவுமே நான்கு உளவாளிகள் மக்கள் முன் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. பொஸ்கோ.

தேசத்துரோகச் செயல்களுக்காக விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ள நான்கு பேரின் குற்றச் செயல்கள் குறித்து விளக்குவதற்காகக் கோண்டாவிலில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே திரு. பொஸ்கோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது;

தமிழீழ மக்கள் மீது ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்துள்ள ஸ்ரீலங்கா அரசுக்குத் துணையாக செயற்பட்டு, எமது விடுதலைப் போருக்கு எதிராக, காட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட தேசத் துரோகிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துரோகிகள் பற்றி மக்கள் கவனமாக இருக்க வேண்டும்; எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்பதற்காக நான்கு துரோகிகளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல கிராமங்களிலும் மக்கள் முன் நிறுத்த முடிவு செய்தோம். வன்னி மாவட்டத்திலும் மக்கள் முன் நிறுத்தப்பட்ட பின் அவர்களுக்குமரண தண்டனை நிறைவேற்றப்படும்.

எம்மால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் விசாரணை செய்யப்பட்டு, அவை பூர்த்தியானதும், குற்றவாளியாகக் காணப்படுபவர்களுக்கு மரண தண்டனையும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகிறது. மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அவர்கள் இழைத்த குற்றங்கள், தண்டனை விவரம் ஆகியன தெரிவிக்கப்படுகின்றன. கூட்டங்கள் மூலமும் விளக்கப்படுகின்றன. சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வரும் மக்கள் முன் நிறுத்தப்படுவது ஏன் என்ற கேள்வி இன்று எழலாம்.

எமது போராட்டத்தை நசுக்க எதிரிக்கு உடந்தையாகச் செயற்படும் உளவாளிகள் இங்கு திரியலாம்.

அவர்கள் கிராமத்திற்குப் புது முகங்களாகத் திரியலாம். அப்படிக் கிராமங்களில் புதிய முகங்கள் காணப்பட்டால் மக்கள் அவர்கள் குறித்து பிரதேச செயலகங்களுக்கு உடனடியாகத் தகவல் கொடுக்கக் கோருகிறோம்.

### கொழும்பில் தகவல் பெறும் கூட்டம்

இங்கிருந்து கொழும்பு செல்பவர்கள் விடுதிகளில் தங்கியிருக்கும் போது, சில சமூக விரோதக் கும்பல்கள் தாம் தமிழீழ போராட்டத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவானவர்கள் போலக் காட்டிக் கொண்டு, மக்களுடன் கதைத்து இங்குள்ள விவரங்களைப் பெறுகின்றார்கள் இது குறித்தும் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இவற்றை விளக்கவே இன்று இந்த சமூக விரோதிகள் மக்கள் முன் நிறுத்தப்படுகின்றனர்— என்று குறிப்பிட்டார்.

மக்களுறவு மற்றும் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா கருத்து வெளியிடுகையில், உலகில் உள்ள பல நாடுகளில் தேச விரோதச் செயல்களில் ஈடுபடும் உளவாளிகள் மக்களால் அடித்துக் கொல்லப்படுகின்றனர். அதே விதமான தண்டனையை மக்களுக்காக நாம் வழங்குகிறோம் — என்றார்.

(அ-3)

## சர்வதேச மகளிர் தினம்

எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகும். இதனை முன்னிட்டு வலிகாமப் பிரிவில் சர்வதேச மகளிர் தின விளக்கக் கருத்தரங்குகள் மற்றும் பெண் அடிமை, நாட்டிய நாடகம் என்பன நடைபெற்று வருகின்றன. [ஒ]

## கண்காட்சி

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வரும் நுண்கலை வாரத்தின் இறுதி நாள் நிகழ்ச்சியும், சங்கீத, நடன, சித்திரக் கண்காட்சியும் நாளை வெள்ளிக்கிழமை வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன. [ஒ-3]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 20

சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜானகி (எட்வின் ராதாதேவி, கிளிநொச்சி) கடந்த திங்களன்று வீரமரணம் அடைந்து விட்டார். [ஒ]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ். மாவட்டத்தில் சித்த, ஆயுள்வேத, யுனானி, ஹோமியோபதி போன்ற பாரம்பரிய வைத்திய முறையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாநகர சுகாதார அதிகாரியின் அலுவலகத்தில் நடைபெறவிருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மாற்று முறை மருத்துவப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ப. உரோமகேஸ்வரனும் கருத்தரங்கில் கலந்து கொள்வார்.

(ஒ-3)

## ஊவாவில் சுவரொட்டிகள்

ஊவா மாகாண தோட்டப் பகுதிகளில் ''மலையகத்தையும் ஒரு யாழ் நகர் ஆக்காதீர்'' என்ற வாசகத்துடன் கூடிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கொள்ளை, கொலை, நாசகாரச் செயல்கள் - இவை யாவும் மலையகத்தைச் சுற்றிக் கொண்டுள்ளன. இதனால் நாட்டில் சாந்தி, சமாதானம் சீர்குலைந்துபோய் கடும் தீவிரவாதம் தலையெடுக்கும் நிலை உருவாகலாம். எனவே உங்கள் எதிர்காலத்தையும், நாட்டின் அபிவிருத்தியையும் சிந்தித்து மலையகத்தையும் ஒரு யாழ்நகர் ஆக்காதீர்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள், அவர்களுக்கு உதவுவோர் பற்றி தோட்ட அதிகாரிக்கு அல்லது பொலீஸ் நிலையத்துக்கு அல்லது இராணுவ முகாமுக்கு அறிவிக்கவும் என்றும் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

[ஒ-10]

## அரச ஊழியரின் சம்பளம்; அமைச்சு மீள் பரிசீலனை

கொழும்பு, பெப். 20

அரச ஊழியர்களின் சம்பளத் திட்டம் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சம்பள மீளாய்வுக் குழுவின் சிபார்சுக்கு அமையவே, அமைச்சு இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களின் சம்பளத்திட்டம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென பொது நிர்வாக அமைச்சர் தெரிவித்த யோசனைக்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்து விட்டது குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் —

அரச ஊழியர்களின் சம்பளத்துக்கும், கூட்டுத்தாபன ஊழியர் சம்பளத்துக்கும் இடையில் பெரும் இடைவெளி இருப்பதாகவும், தற்போது உயர்ந்துள்ள வாழ்க்கைச் செலவை குறைந்த தரத்திலான ஊழியர்களும் சமாளிக்க வேண்டி இருப்பதால் சம்பள மீளாய்வு அவசியமென அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அரச சேவையில் எழுதுவினைஞர் ஒருவரின் ஆரம்ப சம்பளம், சகல அலவன்ஸுகளும் உட்பட 2 ஆயிரத்து 250 ரூபாவாக இருக்கையில் அதே தரத்திலுள்ள வங்கி ஊழியர் ஒருவர் 5 ஆயிரத்து 900 ரூபாவைப் பெறுவதாகவும், இதனால் அரச சேவை ஊழியாகள் விரக்தி அடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

(ஒ-10)

## இலங்கை வங்கி-மக்கள் வங்கி: புனரமைப்பதற்கு முடிவு

இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் புனரமைக்கப்பட உள்ளன. இதன் காரணமாக இந்த வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள்.

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா நேற்று நாடாளுமன்றத்தில் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வங்கிகளும் தொடர்ந்து அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனங்களாகவே இருந்து வரும். இவற்றின் நிர்வாகம் சீர் செய்யப்பட்டு பொதுமக்கள் சிறப்பான சேவையைப் பெறுவார்கள். ஊழியர்கள் பல நன்மைகளைப் பெறுவார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

இந்த இரண்டு வங்கிகளையும் மக்கள் மயமாக்க அரசாங்கம் என்றுமே கருதியது கிடையாது அவற்றை புனரமைப்பது மூலம் அவற்றை திறமையாக இயங்க வைப்பதே அரசின் நோக்கம். இந்த இரண்டு வங்கிகளும் இன்று கடனைத் தீர்க்க முடியாத நிலைக்கு வந்துள்ளன என்பதே உண்மையான நிலையாகும். சர்வதேச வங்கியியல் தரங்களுக்கு அமைய அவற்றின் கடன் பெறும் தகுதி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-த)

## படுக்கை....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

உறுதியளித்திருப்பதாகவும் திரு பெர்னாண்டோ புள்ளே கூறினார்.

படுக்கை, தலையணைகளுடன் இன்று நாடாளுமன்றத்திற்கு இந்த எம.பிக்கள் செல்வர் என்றும் திருப்திகரமான முடிவு எடுக்கப்படாத பட்சத்திலேயே இன்று முதல் நாடாளுமன்றக் கட்டடத்தில் அவர்கள் தங்குவர் என்றும் திரு. பெர்னாண்டோ புள்ளே கூறினார். [இ-எ]

## சமாதானம் ஏற்படும் சூழ்நிலைக்கு உதவுங்கள்

### பௌத்த பீடாதிபதிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 20

நடந்து கொண்டிருக்கும் போரை நிறுத்தி, பேச்சு மூலம் சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறான கோரிக்கை ஒன்றை இந்து சமயப் பேரவை மல்வத்தை, அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகளிடம் விடுத்துள்ளது.

பேரவையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நடந்து கொண்டிருக்கும் போரினால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதுடன் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள சொத்துக்கள் நாசமாக்கப்படுகின்றன. புனித வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுகின்றன —

இனங்களுக்கிடையில் நல்லுறவு சீர் கெட்டுப் போயுள்ள நிலையையும், போரையும் நிறுத்தி பேச்சு மூலம் சமாதானத்தை ஏற்படுத்தப்பட வேண்டும் —

எல்லா இனங்களும் தத்தமது உரிமைகளுடன் ஐக்கியமாகவும், நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதன் அவசியத்தை பௌத்த மகா சங்கங்களும், பீடாதிபதிகளும் ஜனாதிபதிக்கும், அரசுக்கும், மக்களுக்கும் ஆலோசனை வழங்க வேண்டும் — என்று அந்தக் கோரிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-3)

## காத்தான்குடியில் மக்கள் இரவில் நடமாடத் தடை!

கொழும்பு, பெப். 20

மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடியில் இரவு 10 மணிக்குப் பின்னர் மக்கள் நடமாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் நடமாடுவோர் கைது செய்யப்படுவர்.

கிழக்குப் பிராந்திய பொலீஸ் மா அதிபர் இதற்கான உத்தரவை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொள்ளை நடவடிக்கைகளை முறியடிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

[ஒ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா படையினர் பக்கத்தில் ஒன்றரை லட்சம் ஆயுதபாணிகள்!

யாழ்ப்பாணம், பெப். 20 ஸ்ரீலங்கா அரசின் இராணுவ இயந்திரத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதபாணிகள் அங்கத்தினராக உள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையின் மாசி இதழில் வெளியான ஒரு கட்டுரையில் இத்தகவல் இடம்பெற்றுள்ளது.

1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி ஸ்ரீலங்கா அரசின்—

★ இராணுவத்தில் 80 ஆயிரம் பேரும்

★ கடற்படையில் 14 ஆயிரம் பேரும்

★ விமானப்படையில் 6 ஆயிரம் பேரும் உள்ளனர்.

இவை தவிர—

★ 28 ஆயிரம் பேர் கொண்ட பொலீஸ் படையும்—

★ 10 ஆயிரம் பேர் கொண்ட தேசிய துணைப் படையும் (National Auxiliary Force) —

★ 18 ஆயிரம் பேர் கொண்ட ஊர்காவல் படையும்—


ஸ்ரீலங்கா வசம் உள்ளன.

1986, 87 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளில் 37 ஆயிரத்து 660 படையினர் இருந்தபோது 2 ஆயிரம் புலி வீரர்கள் இருந்தார்கள் இது 18 இராணுவத்தினருக்கு ஒரு புலி வீரர் என்ற விகிதமாகும்.

ஆனால்—

1990, 91 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீலங்காவின் முப்படைகளில் ஒரு லட்சம் போர் வீரர்கள் இருக்க, புலிகள் தரப்பில் 10 ஆயிரம் வீரர்கள் இருக்கின்றார்கள் இது பத்து இராணுவத்தினருக்கு ஒரு புலி வீரர் என்ற விகிதத்தில் உள்ளது. [உ]

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15—10—1963

மறைவு: 20—02—1983

செல்வி

**பிரபாலினி பாலசுப்பிரமணியம்**

[வேம்படி மகளிர் உயர்தர விஞ்ஞான வகுப்பு மாணவி]

ஆண்டுகள் ஒன்பதாகி, எம் ஆனந்த வாழ்வற்று நீண்டதோர் கனவு போல நீயின்றி வாடுகின்றோம்- மீண்டொரு பிறப்பெடுத்து மேனிலை நாங்கள் காண ஈண்டு வா — பிரபா.

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

மானிப்பாய். [19778]

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி தங்கரத்தினம் கயிலாசபிள்ளை**

தோற்றம்: 27 — 02 — 1916

மறைவு: 20 — 02 — 1991

திதி: 10 — 03 — 1992

என்றும் எங்கள் மனதை விட்டு நீங்காது நிலைத்திருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

'யோகஸ்தி'
மானிப்பாய். [19786]

## வங்கியாளர் பரீட்சை யாழ்ப்பாணத்திலும்

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் பரீட்சை இரண்டு வருடங்களின் பின்னர் இம்முறை யாழ்ப்பாணத்திலும் நடைபெற உள்ளது.

இந்தப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்றும்—

விண்ணப்பப் படிவங்களை இலங்கை வங்கி பிராந்திய அலுவலகத்தில் பெறலாம் என்றும் — இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி தெரிவித்தார். [இ-3]

## மாலைதீவு அரசும் மனிதஉரிமை மீறல்

மாலைதீவு அரசு பல்வேறு வகைகளிலும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு இருப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சின் மனித உரிமை பற்றிய அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

பேச்சுரிமை, மத உரிமை, பத்திரிகைச் சுதந்திரம், பெண்கள் உரிமை, தொழிலாளர் உரிமை மற்றும் ஆட்சியை மாற்றக்கூடிய ஜனநாயக உரிமை ஆகியவற்றை மாலைதீவு அரசு மீறி வருவதாக அமெரிக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## தெரிவு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளிடம் இருந்து யோசனைகள் கிடைத்துள்ள போதிலும்—

யாழ்ப்பாணத்தில் இருந்து சுயேச்சையான, புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் அமைப்புகளிடம் இருந்தும் யோசனைகள் கிடைக்கவேண்டும் என்று தெரிவுக் குழுவைச் சேர்ந்த சிரேஷ்ட அரசியல்வாதிகள் விரும்பியிருந்தனர் என்றும் அறியவந்துள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 2 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## திரு. செல்லையா வெற்றிவேலாயுதபிள்ளை

[இந்தியன் பாங்க் உத்தியோகத்தர்]

வறுத்தலைவிளான் தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்லையா வெற்றிவேலாயுதபிள்ளை 18-02-92 இல் கொழும்பில் காலமானார். இவர் திருமதி பிரேமாவதியின் [கொழும்பு பெரியாஸ்பத்திரி [M. L. T] உத்தியோகத்தர்] அன்புக் கணவரும், திருமதி வசுமதி, திரு. பரந்தாமன் ஆகியோரின் தகப்பனாரும், செல்வி கலாஜினியின் பேரனும் திருமதி அழகரத்தினம் தருமலிங்கம், திருமதி அரியரத்தினம் காசிலிங்கம் ஆகியோரின் சகோதரரும், திருமதி ஈழவிளாவதி தவேந்திரன், காலம்சென்ற செல்வி சுமணாவதி, காலம்சென்ற திருமதி கமலாவதி துரைராசரட்ணம், காலம்சென்ற திருமதி சந்திராவதி ஐயாத்துரை, திரு. பாலச்சந்திரன், திரு. இராமச்சந்திரன், திரு. சரத்சந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 19-2-92 காலை 11 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி அழகரத்தினம் தருமலிங்கம் [சகோதரி]

வறுத்தலைவிளான்,
தெல்லிப்பழை. [19785]

## திரு. க. தட்சணாமூர்த்தி

திரு. க. தட்சணாமூர்த்தி காலமாகி விட்டார். அன்னார் திரு. திருமதி கந்தையா அவர்களின் அருமைப் புதல்வனும், செல்வி வாலாம்பிகை கந்தையா [முன்னாள் அதிபர், திருக்கேதீஸ்வர வித்தியாலயம்], திருமதி தையல்நாயகி [நொதேர்ன் பார்மசி ஊழியர்] ஆகியோரின் அருமைச் சகோதரனும், ந. கலியுகநாதனின் மைத்துனரும், சி. இளையதம்பியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செல்வி வா. கந்தையா

ரெயில்வே றோட்,
நீராவியடி. [19789]

## திருமதி பொன்னம்பலம் மாரிமுத்து

மண்டைதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் மாரிமுத்து 19-2-92 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை நாகமுத்துவின் மூத்த மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், சபாரட்ணம், சபாநாயகம், பாலேஸ்வரி, சாந்தமலர், நீலாம்பிகை, புனிதவதி, சூரியகாந்தன் பீ. ஏ. [சுவிஸ்], சத்தியமூர்த்தி [ஜேர்மன்], சந்திரகுமார் [சுவிஸ்], சந்திரபாலு [ஜேர்மன்] ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, லலிதா, நாகராஜா, கெங்காதரன், கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற பத்மநாதன், காஞ்சனா, கோமளா ஆகியோரின் அன்பு மாமியாரும், சின்னம்மா, தங்கம்மா, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை [21-2-92] காலை 8 மணிக்கு பிடாரி கோவிலடி, கொக்குவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மக்கள்

பிடாரி கோவிலடி,
கொக்குவில் மேற்கு. [19791]

## இராசையா செல்வராசா

[இளைப்பாறிய ஆசிரியர்]

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்த இராசையா செல்வராசா நேற்று [19-2-92] காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற இராசையா - செல்லம்மா தம்பதிகளின் இரண்டாவது புத்திரரும், சிவயோகத்தின் [இளைப்பாறிய ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை] அன்புக் கணவரும், அனுசியா [சட்டத்தரணி], சசிலேகா, அம்பிகை, மதிவதனி, மலர்வதனி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், நடேசலிங்கம் [கணக்காளர்], சின்னத்தம்பி [விரிவுரையாளர், யாழ், பல்கலைக்கழகம்], இராசஇராசேஸ்வரன், இதயலிங்கம், இராசகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கந்தையா [இளைப்பாறிய அதிபர்], காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம் வேலாயுதபிள்ளை, செல்லையா [இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்], இராசதுரை, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஷர்மிலி, ஷிராணி, சாளினி, குமரன், யாதவன், நாராயணி, வினாயக், சங்கமி, ரஜிதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
மா. சின்னத்தம்பி [மருமகன்]

[19792]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org